Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 08, 2024

வியாழக்கிழமை ஆகஸ்ட் 08, 2024 | ஒளி: 10 கதிர் 024 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## யாழுக்கு நேரடி விமான சேவை

யாழ்பாணத்திற்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவை எதிர்வரும் செப்டெம்பர் 1ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. யாழ்ப்பாணம் இண்டிகோவின் 34ஆவது சர்வதேச இலக்காக சென்னையில் இருந்து நேரடி விமானங்களுடன் இணைகிறது.

இண்டிகோவின் உலகளாவிய விற்பனைத் தலைவர் வினய் மல்ஹோத்ரா கூறுகையில், 'இரண்டு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதில் ஒரு ஊக்கியாக விளங்கும் யாழ்ப்பாணத்தை இலங்கையின் புதிய இடமாக அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதித் தேர்தலில்

# "எனக்கு போட்டி இல்லை"



என்னைப் பொறுத்தவரை இந்த ஜனாதிபதித் தேர்தல் தனக்கு ஒரு போட்டி அல்ல, நான் யாரிடமும் சண்டையிட வரவில்லை. தான் தனது கொள்கைகளுடன் வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். உண்மையைச் சொல்லி நாட்டைக் காப்பாற்றத் தயாரா? அல்லது பொய்யைக் கூறி நாட்டைக் குழப்பத் தயாரா? என்பதைச் சிந்திக்க வேண்டும் என்றார்.

நீங்கள் விரும்பினால் எனக்கு வாக்களியுங்கள். இதை முன்னெடுத்துச் செல்வேன். நான் மற்றவர்களைப் போல வாக்குறுதிகளை அளிப்பதில்லை. செய்து காட்டியுள்ளேன். ஏனையோர் வாக்குறுதிகளை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஊடக பிரதானிகளுடன் கொழும்பில், புதன்கிழமை (07) நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிலரினால் ஊழலைப் பற்றிப் பேச மட்டுமே முடியும். ஆனால், ஊழலைத் தடுப்பதற்காகப் பல சட்டங்களை இயற்றியுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, குற்றச் செயல்களால் சம்பாதித்த சொத்து தொடர்பான சட்டமூலம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஊழல் குற்றச்சாட்டுள்ள எவரையும் தாம் ஒருபோதும் பாதுகாக்கவில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## திரும்பி வாருங்கள் நாமல் அழைப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகியவர்கள் மீண்டும் கட்சியில் இணையுமாறு ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் புதன்கிழமை(07), ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

பின்வாங்கினார் தம்மிக்க; முன்வந்தார் நாமல்

## ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்தது மொட்டு

நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனது ஜனாதிபதி வேட்பாளராகப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை பெயரிட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளரை உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (07) காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும்ஜயந்த கெட்டகொட உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

தொடர்ச்சி P2

## "ரணிலுடன் இணைந்த மொட்டுக்கள் அஞ்சுகின்றன"

மொட்டுக் கட்சியிலிருந்து ரணிலிடம் சென்று சரணடைந்தவர்கள், அந்தக் கட்சியின் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டதும் தங்களின் எதிர்காலம் என்னவாகுமோ என்று பயந்துபோய் இருக்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) நடைபெற்ற அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாட்டு மக்களின் அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டன.



தொடர்ச்சி P2

## 'அரகலய'வினருக்கு மொட்டு அழைப்பு



'அரகலய' போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர், யுவதிகளை, தமது கட்சி சார்பில் போட்டியிடுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பு மனுக்களைப் பெறுவதற்காகப் போராட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நெலும் மாவத்தையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் புதன்கிழமை (07) காலை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆடையின்றி புகழ்பாடுகின்றனர்

ரணில் விக்ரமசிங்கவை சிறைக்கு அனுப்பும் வரை தூங்க மாட்டோம் என சூளுரைத்தவர்கள் இன்று ஆடையில்லாமல் ரணில் புகழ்பாடுகிறார்கள்.ஆனால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அந்த நிலைக்குச் செல்லமாட்டார்கள் சஜித் பிரேமதாசவுக்கு முழுமையான ஆதரவு வழங்குவார்கள். அதன் மூலம் செப்டெம்பர் 22 ஆம் திகதி அரசாங்கத்தைப் பொறுப்பேற்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) இடம்பெற்ற 'அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை' தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,



தொடர்ச்சி P2

## 1,700 ரூபாய் வேண்டும்' 'வாக்குறுதியை நிறைவேற்றுவேன்'

### ஜீவன் விடாபிடி



பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரம் குறித்து எதிர்வரும் 12ஆம் திகதி சம்பள நிர்ணய சபையுடன் கலந்துரையாடி, முன்னதாக வாக்குறுதி அளித்தவாறு நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொடுப்பேன் என், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும் நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) இடம்பெற்ற,

தொடர்ச்சி P2

## சஜித் அணியுடன் தயாசிறி கைகோர்ப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இதனையடுத்து, ஐக்கிய மக்கள் சக்தியுடன் கொள்கையளவிலான 25 விடயங்கள் உள்ளடங்கலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் நேற்று (07) இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க அண்மையில் தீர்மானம் மேற்கொண்டிருந்த நிலையில், தற்போது ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கில்

## சீன இராணுவத்தை நிறுத்த முயற்சி



வடக்கு, கிழக்கில் சீன இராணுவத்தை நிலைநிறுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாகத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இந்த முயற்சிகளுக்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, சீன இராணுவத்தினரை நாட்டுக்குள் கொண்டுவரும் திட்டத்தை அரசாங்கம் அனுமதிக்கின்றதா என கேட்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## என் மீது அவதூறு கூறுகின்றனர்

அரசியலில் தனது வளர்ச்சியைப் பிடிக்காத சிலர் தன்னைப்பற்றி அவதூறான வகையில் இணையத்தளங்களில் எழுதுகின்றனர்.எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பியே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

என்னைப்பற்றி அவதூறான வகையில் எனது வளர்ச்சியைப் பிடிக்காத சிலர் இணையத்தளங்களில் எழுதுகின்றனர். இவ்வளவு காலம் அரசியலில் இருக்கின்ற நான் முதல் முதலில் இன்றுதான் இங்கே எனக்கான நியாயம் கேட்டு நிற்கின்றேன்.



தொடர்ச்சி P2

## பதில் இன்றேல் இரத்து செய்யவும்

கிழக்கு மாகாணத்தில் அப்பாவி மக்களின் 170 கோடி ரூபாவை மோசடி செய்துவிட்டு இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ள நிதி நிறுவனத்தின் பணிப்பாளரை நாட்டுக்குக் கொண்டு வர முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் நான் இந்த சபையில் முன்வைத்துள்ள கேள்விகளுக்கு இன்று வரை பதில் இல்லை ஒன்று பதிலளியுங்கள் ,இல்லையேல் வாய்மூல விடைக்கான வினாக்கள் முறைமையை இரத்து செய்யுங்கள் என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போதே,

சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், ஏறாவூர் மற்றும் மருதமுனை ஆகிய பகுதிகளில் 2014.02.05ஆம் திகதி முதல் 'ப்ரிவெல்த் க்ளோபல் பிரைவட் லிமிடெட்' எனும் பெயரில் நிதி நிறுவனம் ஒன்று நடத்திச் செல்லப்பட்டதா,? அந்நிறுவனத்தின் பணிப்பாளராக பணியாற்றிய அஹமட் செரீம் முஹம்மது சிஹாப் மற்றும் பாத்திமா பர்ஸானா மார்கார் ஆகியோர் சுமார் 1,400 பேரின் 170 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதியை மோசடி செய்துள்ளார்கள் என்பதையும், மேற்குறிப்பிடப்பட்ட பணியாளரும் அவரது குடும்பத்தினரும் இன்று வரை இந்தியாவில் தலைமறைவாகியிருப்பதையும்,இது தொடர்பில் கல்முனை மற்றும் சம்மாந்துறை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதையும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அறிவாரா? இவர்களைக் கைது செய்து இலங்கைக்கு அழைத்து வர எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்னவென்பதையும் அமைச்சர் சபைக்கு அறிவிப்பாரா ? என இரா. சாணக்கியன் எம்.பி. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “எனக்கு போட்டி இல்லை”



நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் நாட்டை அந்த நிலையிலிருந்து காப்பாற்றி திறமையை நிரூபித்ததன் காரணமாக தமக்கு யாருடனும் போட்டி இல்லை எனவும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது குறித்துத் தான் கவனம் செலுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனோ அல்லது கடன் வழங்குநர்களுடனோ செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் எந்த அளவுகோலையும் மாற்ற முடியாது எனவும் அவ்வாறு செய்தால் இலங்கைக்குக் கிடைக்கும் நிதியை இழக்க நேரிடும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

## யாழுக்கு நேரடி விமான சேவை

யாழ்ப்பாணம், ஒரு வளமான வரலாறு மற்றும் கலாசார முக்கியத்துவத்தைப் பெருமைப்படுத்துகிறது. தமிழ் பாரம்பரியம் அதன் மரபுகள், திருவிழாக்கள் மற்றும் வரலாற்று அடையாளங்களில் பிரதிபலிக்கிறது, இப்பகுதியின் காலனித்துவ காலத்தின் கட்டிடக்கலை சான்றாக விளங்கும் யாழ். கோட்டை மற்றும் மத மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இந்து கோவிலான நல்லூர் கந்தசுவாமி கோவில் போன்ற சின்னமான தளங்களைப் பார்வையாளர்கள் பார்வையிடலாம். யாழ்ப்பாணத்தை பயணிகள் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாக கருதப்படுகின்றது.

தங்கள் பயணத்தைத் திட்டமிட விரும்பும் வாடிக்கையாளர்கள் எங்கள் அதிகாரப்பூர்வ இணையத்தளமான https://www.goindigo.in/ வழியாகவோ அல்லது எங்கள் மொபைல்செயலிமூலமாகவோ Ticket முன்பதிவு செய்யலாம்.

## திரும்பி வாருங்கள் நாமல்...

சவாலான நேரத்தில் தன்னை நம்பி பாரிய பொறுப்பை ஒப்படைத்த கட்சியின் அரசியல் குழு மற்றும் கட்சி உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்த அவர், சவால்களை எதிர்கொள்ள நாங்கள் தயாராக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கட்சி உறுப்பினர்கள் மற்றும் கொள்கைகள் மீது நம்பிக்கை வைத்துள்ளதுடன், இளைஞர்கள் எதிர்பார்க்கும் அரசியல் கனவு நனவாகும் என நம்புவதாக கூறியுள்ளார்.

அத்துடன், கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்துள்ள அனைவரையும் மீண்டும் தம்முடன் இணையுமாறு, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் என்ற வகையிலும் ஜனாதிபதி வேட்பாளர் என்ற வகையிலும் அழைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## “ரணிலுடன் இணைந்த...

மக்கள் நிம்மதியாக, மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள் என்ற நினைப்பிலேயே அரசாங்கம் இன்று இந்த பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கும் என்று கருதுகின்றோம். ஆனால் அரசாங்கம் தூர இடங்களுக்கு செல்லத் தேவையில்லை. கொழும்பிலுள்ள சில இடங்களுக்கு சென்று பார்த்தால் நிலைமை உண்மையில் எப்படி இருக்கின்றது என்பதனை புரிந்துகொள்ள முடியும். தற்போது அரசாங்கம் 5 பில்லியன் டொலர் கையிருப்பில் இருப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் ஒரு இலட்சம் ரூபா கடனில் இருப்பவரின் சட்டைப் பையில் ஐயாயிரம் ரூபா இருப்பதை போன்றே இருக்கின்றது. அன்று ரணில் விக்கிரமசிங்கவை நாட்டை கடனுக்குள் தள்ளியதாகவும், மத்திய வங்கி கொள்ளையில் ஈடுபட்டதாகவும் கூறிய பந்துல குணவர்தன போன்றோர் இப்போது அவரை புகழ்ந்து பேசுகின்றனர். ஆனால், இவர்கள் வீசா சேவை உள்ளிட்டவற்றில் கொள்ளையிட்டதை மறந்துவிட்டனர். இன்னும் 48 நாட்களே உள்ளன. அதன்பின்னர் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.
இதேவேளை கடந்த வாரத்தில் நாமல் ராஜபக்ஷவும் சஜித் பிரேமதாசவும் சந்தித்ததாக செய்திகளை பரப்பினர். சில்லரைத்தனமான மகிழ்ச்சியே இது. ஆனால் இன்று மொட்டுக் கட்சியில் இருந்து ரணிலிடம் சென்று சரணடைந்தவர்களின் நெஞ்சு இப்போது நாமல் ராஜபக்ஷ வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் வேகமாக துடிக்கின்றது. தங்களின் எதிர்காலம் என்னவாகுமோ என்று பயந்துபோய் இருக்கின்றனர். அதேபோன்று 1977 காலதத்தில் ஜே.ஆருக்கு இருந்ததை போன்ற குழுவினரே தன்னிடம் இருப்பதாக ஜனாதிபதி கூறியதை கேட்டு அவர் எமது முன்னாள் தலைவர் என்ற ரீதியில் எனக்கும் வெட்கம் ஏற்பட்டது. அவர் கூறுவதை போன்று அப்போதைய லலித் அதுலத்முதலியாக இருந்தவர் மகிந்தானந்தவா? காமினி திஸாநாயக்கவா பிரசன்ன ரணதுங்க, ரணசிங்க பிரேமதாசவா லன்சா? ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை வழங்க நாங்கள் என்ன முட்டாள்களா? என்று கூறியவர்கள்தான் இப்போது ரணிலுடன் இருக்கின்றனர் என்றார்.

## ‘அரகலய’வினருக்கு மொட்டு அழைப்பு

அனைவரும் எதிர்பார்க்கும் வகையில் இளம் தலைவர்களிடம் எதிர்காலத்தில் நாட்டின் தலைமைத்துவத்து வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

“போராட்டத்தின் போது இந்த நாட்டிலுள்ள அனைவரும் இளம் தலைவருக்கு இந்த நாட்டை கொடுங்கள் என்று சொன்னார்கள். இப்போது எமது கட்சியை எடுத்துக்கொண்டால் மிகவும் சுத்திகரிக்கப்பட்ட கட்சியாக உள்ளது.

எனவே, போராட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர், யுவதிகள் எங்களிடம் வந்து வேட்பு மனுக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். இளையவர்களை அதிகளவு கொண்ட மற்றும் தூய்மையான கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளது” என்றார்.

## சஜித் அணியுடன் தயாசிறி கைகோர்ப்பு

முன்னதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாச ராஜபக்ஷ களமிறங்குவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக கட்டுப்பணம் செலுத்தினார்.

அதனையடுத்து, சுதந்திரக் கட்சியில் உள்ள பலரது ஆதரவு தமக்கு உள்ளதாகவும் அவர்களை இணைத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்ல எதிர்பார்ப்பதாகத் தேசிய ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்தது.

இருப்பினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டப்பூர்வமான பொதுச்செயலாளர் என தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, ரணில் விக்ரமசிங்கவுக்கு சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்குவதாக வெளியாகிய தகவலை நிராகரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றி வைத்துள்ள அமைச்சர் நிமல் சிறிபால, ரணில் விக்ரமசிங்கவுக்கு கட்சியின் ஆதரவை அறிவித்துள்ளதாக தயாசிறி தனது எக்ஸ் தளத்தில் கடந்த 31ஆம் திகதி பதிவொன்றை இட்டிருந்தார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகக் கடந்த 03ஆம் திகதி பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி வேட்பாளரை...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோடிஸ்வர வர்த்தகர் தம்மிக பெரேரா பெயரிடப்படலாம் என நீண்ட நாட்களாக கதைக்கப்பட்ட நிலையில், ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட போவதில்லை என, அவர் இறுதி நேரத்தில் அறிவித்த நிலையில், ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடாக பாராளுமன்றத்துக்கு தெரிவான பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அடுத்து நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அதரவளித்து வருகின்றனர்.

இரத்தினபுரி, பொலன்னறுவை, அம்பாறை உள்ளிட்ட மேலும் சில மாவட்டங்களை சேர்ந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களே ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது.

## ஆடையின்றி புகழ்பாடுகின்றனர்

அரச தரப்பின் பெரும்பாலானவர்கள் வங்குரோத்து நிலைக்கு மத்தியிலும் பெரும் பணக்காரர்களாகியுள்ளனர். ஆகவே, இவர்களின் சொத்து விபரங்களை ஆராய வேண்டும்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது சஜித் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கவில்லை என்று அரச தரப்பினர் குற்றம்சாட்டுகின்றனர். நெருக்கடியின் போது அரசாங்கத்தைப் பொறுப்பேற்குமாறு அப்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுத்தார். இதன்போது கட்சி என்ற ரீதியில் நாங்கள் நிபந்தனைகளை முன்வைத்தோம். நாட்டு மக்கள் “கோட்டா கோ ஹோம்” என்று குறிப்பிடும் போது எவ்வாறு அவருடன் ஒன்றிணைந்து அரசாங்கத்தை நாம் பொறுப்பேற்பது? என்றார்.

## ‘வாக்குறுதியை நிறைவேற்றுவேன்’

மாத்தறை நில்வலா கங்கையை அண்மித்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள உவர்நீர் தடுப்பு அணை காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை தொடர்பிலான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜீவன் தொண்டமான், “பெருந்தோட்ட மக்களுக்கு 1700 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. வர்த்தமானி வெளியிட்டதன் பின்னர் பெருந்தோட்ட கம்பனிகள் வர்த்தமானிக்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்குச் சென்று இடைக்கால தடையுத்தரவு பெற்றுக்கொண்டன. இதனையடுத்து நாங்கள் வர்த்தமானியை வாபஸ் பெற்றதுடன், தொடர்ந்து தோட்டக் கம்பனிகள் வழக்கை வாபஸ் பெற்றன.

இந்த நிலையில், எதிர்வரும் 12 ஆம் திகதி சம்பள நிர்ணய சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன். நியாயமான சம்பளத்தை நிச்சயம் பெற்றுக்கொடுப்பேன். வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவேன்.

1,000 ரூபாய் சம்பளத்தை பெற்றுக்கொடுப்பேன் என்று குறிப்பிட்ட போது எனக்கு அரசியல் அனுபவம் போதாது என்று என்னை விமர்சித்தார்கள். ஆனால், ஆறு மாத காலத்துக்குள் 1,000 ரூபாயை பெற்றுக்கொடுத்தேன். வழங்கிய வாக்குறுதியை நான் நிறைவேற்றுவேன். சம்பள விவகாரத்தைக் கொண்டு நான் அரசியல் செய்யவில்லை” என்றார்.

அத்துடன், “உவர்நீர் தடுப்பு காரணமாக ஒன்றரை இலட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த திட்டத்தால் 8 இலட்சம் பேர் பயனடைந்துள்ளார்கள் என்பதை எவரும் குறிப்பிடுவதில்லை.

மொத்த சனத்தொகையில் 60 சதவீதமானோர் மாத்திரமே தூய்மையான குடிநீரைப் பெறுகிறார்கள். இந்த திட்டத்தைக் கைவிட்டால் பலர் பாதிக்கப்படுவார்கள். இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சகல தரப்பினரது ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துள்ளோம். இது தொடர்பில் மூன்று பல்கலைக்கழகங்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம்.

குடிநீர் விவகாரத்தில் அரசியல் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்” என்று மேலும் குறிப்பிட்டார்.

> **1,000 ரூபாய் சம்பளத்தை பெற்றுக்கொடுப்பேன் என்று குறிப்பிட்ட போது எனக்கு அரசியல் அனுபவம் போதாது என்று என்னை விமர்சித்தார்கள். ஆனால், ஆறு மாத காலத்துக்குள் 1,000 ரூபாயை பெற்றுக்கொடுத்தேன். வழங்கிய வாக்குறுதியை நான் நிறைவேற்றுவேன். சம்பள விவகாரத்தைக் கொண்டு நான் அரசியல் செய்யவில்லை**

## சீன இராணுவத்தை நிறுத்த முயற்சி

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) நடைபெற்ற அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில், மன்னார் வைத்தியசாலையில் மதியராஜன் சிந்துஜா மரணம் தொடர்பில் நான் வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியர்களிடம் கதைத்த போது விசாரணைகள் நடப்பதாகக் கூறினர். ஆனால் இந்த விசாரணை ஆட்களை மாற்றும் விசாரணையாக இருக்கக் கூடாது. நீதியான விசாரணையின் ஊடாக சம்பந்தப்பட்டவர்கள் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும் என்பது எங்களின் கோரிக்கையாக உள்ளது. இதேவேளை 9 வைத்தியர்கள் எங்களின் வைத்தியசாலைக்கு வரவுள்ளனர். அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இல்லையென்றால் அவர்கள் வைத்தியசாலைக்கு வருவது கடினமானதாக இருக்கும்.

இதேவேளை இந்திய டோலர் படகுகளின் வருகைகளால் எமது மீனவர்கள் கடந்த பல தசாப்தங்களாக துன்பங்களை எதிர்நோக்குகின்றனர் என்றார்.

## என் மீது அவதூறு கூறுகின்றனர்

மன்னாரில் ஒருவர் கைது செய்யப்பட்ட பின்னர் அவருக்குப் பின்னணியாக நான் இருப்பதாக யாழ். புலனாய்வு என்ற இணையத்தளம் மிக மோசமாக எழுதியுள்ளது. இதில் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபரும் இணைக்கப்பட்டுள்ளார். அதேபோன்று மக்கள் தொடர்பாடல் அமைச்சரும் இந்த விடயத்தில் இணைக்கப்பட்டுள்ளார். இதனால் இது தொடர்பில் விசாரணை நடத்திக் குறித்த இணையத்தளம் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன். இதனுடன் தொடர்புப்படுத்தப் பட்டுள்ளவர்களும் இதில் பதிலளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கின்றேன். இதன்போது பதிலளித்த சபாநாயகர், இந்தப் பிரச்சினையைச் சிறப்புரிமை குழுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## பதில் இன்றேல் இரத்து செய்யவும்

இந்த கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சபைக்கு இல்லாததால் அரச தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க பதிலளிக்க 3 மாதங்கள் கால அவகாசம் கோரினார்.

இதன்போது எழுந்த இரா. சாணக்கியன் எம்.பி. இந்த கேள்விகளை 2020 செப்டெம்பர் மாதம் கேட்டேன். நடுத்தர மக்களின் 170 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதாகக் குறிப்பிடப்படுகிறது. பாதிக்கப்பட்ட மக்கள் எம்மிடம் முறையிட்டு, பாராளுமன்றத்தின் ஊடாக பதிலை எதிர்பார்த்துள்ளார்கள்.

2020 முதல் இன்று வரை மூன்று தடவைகள் இந்த கேள்விகளைத் தொடர்ந்து சமர்ப்பித்துள்ளேன். ஆனால் இதுவரை பதில் கிடைக்கவில்லை. மக்கள் மத்தியில் செல்லும் போது பாதிக்கப்பட்டவர்கள் எம்மிடம் கேள்வி கேட்கிறார்கள். தொடர்ந்து தாமதப்படுத்துவதால் நாங்களும் இதில் தொடர்புபட்டுள்ளோம் என்று பாதிக்கப்பட்டவர்கள் சந்தேகிப்பார்கள்.

இதுதொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் பற்றி கேட்கும் போது அதற்குப் பதிலளிக்காமல் காலம் தாழ்த்துவது முறையற்றது. ஆகவே சபாநாயகர் இவ்விடயத்தில் தலையிட வேண்டும் என்றார்.

இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நீங்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடளித்தீர்களா என்று கேள்வியெழுப்பினார். இதற்குப் பதிலளித்த இரா.சாணக்கியன் எம்.பி. வெளிவிவகாரத்துறை அமைச்சின் ஊடாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு இவ்விடயங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இதுவரை முன்னேற்றகரமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. பொலிஸார் இவ்விடயத்தை நீதிமன்றத்துக்கு அறிவித்து பிடியாணை உத்தரவைப் பெற்றுக்கொண்டால் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்று இந்திய அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். ஆகவே இவ்விடயத்தில் உடனடியாக தீர்வை பெற்றுக்கொடுங்கள் என்றார்.

# “மக்கள் முட்டாள்கள் இல்லை”

எவ்வித கொள்கையும் இல்லாமல் கட்சி மாறி செயற்படுபவர்கள் கூறுவதனை கேட்பதற்கு மக்கள் முட்டாள்களல்ல. ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களியுங்கள் என்று இவர்கள் எமது பிரதேச மக்களிடம் கூறினால் பிரதிபலன் எவ்வாறு அமையும் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(07) இடம்பெற்ற ‘அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை’ தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து எதிர்கால அரசியலில் ஈடுபடவுள்ளதால் பொதுஜன பெரமுனவின் எம்.பியான மதுர விதானகே என் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார். ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களியுங்கள் என்று இவர் எமது பிரதேச மக்களிடம் குறிப்பிட்டால் பிரதிபலன் எவ்வாறு அமையும் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களாக அனைவரும் சஜித் பிரேதாசவுடன் வெளியேறினார்கள். டி.எஸ்.சேனாநாயக்கவின் கொள்கைக்கு அமையவே நாங்கள் செயற்படுகிறோம். ஆனால், இவர்கள் அவ்வாறில்லை. எவ்வித கொள்கையும் இல்லாமல் கட்சி மாறி செயற்படுகிறார்கள். இவர்கள் கூறுவதனை கேட்பதற்கு மக்கள் முட்டாள்களல்ல,

2022.05.10ஆம் திகதி நான் பதிவிட்ட எக்ஸ் வலைத்தள பதிவைச் சபைக்குச் சமர்ப்பிப்பதாக இவர் (மதுர விதானகே) குறிப்பிடுகிறார். அந்த பதிவை முழுமையாக அவர் சமர்ப்பிக்க வில்லை. ஆகவே, நான் அவற்றைச் சமர்ப்பிக்கிறேன். 2022ஆம் ஆண்டு நெருக்கடியின் போது நாடு மூழ்கும் முன்னர் சர்வதேச நாணய நிதியத்தை நாடுங்கள் என்று குறிப்பிட்டோம். நாங்கள் குறிப்பிட்டதை போன்று நாணய நிதியத்துக்குச் சென்றிருந்தால் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியிருக்கமாட்டார். இவர்கள் ரணில் விக்ரமசிங்கவை தேடிச் சென்றிருக்க மாட்டார்கள். அன்று தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு விட்டு இன்று பொருளாதாரம் பற்றி எங்களுக்கு வகுப்பு எடுக்கின்றார்கள்.



மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ஏற்குமாறு கலாநிதி நந்தலால் வீரசிங்கவுக்கு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்த போது, நந்நலால் வீரசிங்க என்னை தொலைபேசியில் தொடர்புக் கொண்டு, ஹர்ஷ மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ஏற்குமாறு எனக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்து ள்ளார், நான் பதவியேற்றால் எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்குவீர்களா என்றார். அச்சமில்லாமல் வாருங்கள், முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்று குறிப்பிட்டோம். இதனை அவரிடமே கேட்டுப்பாருங்கள்

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டு விட்டோம் என்று குறிப்பிடும் அரசாங்கம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது 18 சதவீத வரி விதித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைக் கடுகளவும் மாற்றமுடியாது என்று குறிப்பிடுவது முட்டாள்தனம். நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களே இன்று எதனையும் மாற்ற முடியாது என்று பிதற்றுகின்றார்கள்.

பொருளாதாரம் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், பொருளாதார மறுசீரமைப்பில் பாதிக்கப்படும் மக்களை ஜனாதிபதி மறந்து விட்டார் என்றார்.

# கம்பஹாவில் தொடர்ந்து வெடித்த துப்பாக்கிகள்



கம்பஹா, தம்மிட்ட பிரதேசம் மற்றும் ஜா-எல, மாகேவிட்ட பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (06) இரவு இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இரண்டு துப்பாக்கிச் சூடுகளையும் ஒரே குழுவினரே மேற்கொண்டுள்ளதாகச் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஜா-எல, மாகேவிட்ட பகுதியில் செவ்வாய்க்கிழமை(06) இரவு 7.40 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த 43 வயதான ரங்க ஜெயநாத் எனும் கே.ஜி மஞ்சு என்ற நபர் கம்பஹா வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டார்.

வெள்ளையடிக்கும் தொழிலாளியாக பணிபுரியும் குறித்த நபர், கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருள் வியாபாரம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர் என பொலிஸார் கூறியுள்ளனர்.

இவர் டுபாயில் மறைந்திருக்கும் போதைப்பொருள் வர்த்தகர் தினேஷ் வசந்தவுக்கு நெருக்கமானவர் எனவும், அவர் ஏனைய போதைப்பொருள் வியாபாரிகளைப் பாதுகாப்புப் படையினருக்குக் காட்டிக்கொடுத்தாக கூறப்படும் சம்பவமே இந்த துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்று அரை மணித்தியாலத்துக்குள், அங்கிருந்து சுமார் நான்கு கிலோமீற்றர் தொலைவிலுள்ள கம்பஹா தம்மிட பிரதேசத்தில் மற்றுமொரு துப்பாக்கிச் சூடு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர், மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடவத்தை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சமில் அயந்த என்ற இளைஞரே துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன், ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உட்பட பல பொலிஸ் குழுக்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தொடரும் ‘யுக்திய’ கைதுகள்



போதைப்பொருள் ஒழிப்புச் சோதனைகள் நடவடிக்கையான ‘யுக்திய’ நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

‘யுக்திய’ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் (06) நடத்தப்பட்ட 780 சுற்றிவளைப்புகளின் போது 750 ஆண் சந்தேக நபர்களும் 26 பெண் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 22 பேர் மேலதிக விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், 03 பேரிடம் சட்டவிரோத சொத்துக்களை வைத்திருந்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், 03 சந்தேக நபர்கள் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப் பட்டவர்களில் 03 சந்தேக நபர்களுக்கு எதிராகப் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுக்காகப் பிடியாணை பிறக்கப்பட்டுள்ளதுடன், 19 பேருக்குப் போதைப்பொருள் அல்லாத குற்றங்களுக்காகத் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 326 கிராம் ஹெரோயின், 183 கிராம் ‘ஐஸ்’ மற்றும் 271 கிராம் கஞ்சாவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், 09 கிராம் ஹெரோயின், 304 கிராம் ‘ஐஸ்’ மற்றும் 142 கிராம் கஞ்சாவை தென் மாகாணத்தில் கைப்பற்றியதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

## மாணவிக்கு கட்சி உறுப்பினர் பாலியல் தொல்லை;

# நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்

இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) கட்சி ஒருங்கிணைப்பாளரான ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இவரைக் கைது செய்து செய்யுமாறு ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தியுள்ள நிலையிலும் இதுவரை அவர் கைது செய்யப்படவில்லை. இவ்விடயம் குறித்து கல்வி அமைச்சரின் நிலைப்பாடு என்னவென இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா.சாணக்கியன் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்தவிடம் நேரில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு கேள்வி எழுப்பிய இரா.சாணக்கியன் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிக்கு அந்த பாடசாலையின் ஆசிரியரான கோபிநாத் என்பவர் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இந்த மாணவி ஜனாதிபதிக்கு இவ்விடயத்தை அறிவித்துள்ளார்.

இந்த நபரை உடனடியாக கைது செய்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு கடந்த 12ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இருப்பினும், இந்த ஆசிரியரை பொலிஸார் இன்றுவரை கைது செய்யவில்லை. தனது சட்டத்தரணி ஊடாக அவர் நீதிமன்றில் முன்னிலையாகுவார் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர். பொலிஸாரின் கடமை இதுவல்ல, கோபிநாத் என்ற இந்த ஆசிரியர் தான் இராஜாங்க அமைச்சர் பிள்ளையானின் கட்சி ஒருங்கிணைப்பாளர் என்று பகிரங்கமாகக் கூறுகின்றார்.

இந்த மாணவியிடம் நான் குறிப்பிடுவதைப் போல், இருக்காவிடின் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று இந்த ஆசிரியர் மிரட்டியுள்ளார் என்றார்.

# பாலியல் தொல்லை குறித்து ஆசிரியரிடம் விசாரணை

மட்டக்களப்பு தேசிய பாடசாலை ஒன்றின் மாணவியொருவருக்கு ஆசிரியர் பாலியல் தொல்லை கொடுக்கும் விடயம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ராசமாணிக்கம் சாணக்கியன் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அமைச்சர் கூறுகையில்,

மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அந்த பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கல்வியமைச்சு பணிப்புரைகளை விடுக்கும்

இந்த சம்பவம் தொடர்பான தகவல்களைப் பாராளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் சாணக்கியனிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கும் உடனடியாக சட்ட நடவடிக்கை முன்னெடுப்பதற்கும் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# கசிப்பு காய்ச்சியவர் கைது

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை பகுதியில் கசிப்பு காய்ச்சி விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் புதன்கிழமை(07) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதோடு,

227 போத்தல் கோடாவும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டது.

குறித்த சந்தேக நபர் கொழும்புத்துறையிலும் வட்டுக்கோட்டையிலும் வீடுகளை வாடகைக்கு எடுத்து கசிப்பு காய்ச்சி பல இடங்களில் விற்பனையில் ஈடுபட்டாரென பொலிஸார் தெரிவித்தனர்.

# கைதான மீனவர்களுக்கு ஒரு வருட சிறை

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம்-நெடுந்தீவு கடற்பரப்பினுள் கைதான 19 தமிழக கடற்றொழிலாளர்களுக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, 05 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, படகோட்டிகள் மூவருக்கு தலா 4 மில்லியன் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதோடு தண்ட பணம் கட்ட தவறின் ஒரு வருடக் கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என மன்று உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு வேறு தினங்களில் கைதான 31 தமிழக கடற்றொழிலாளர்களின் வழக்கு விசாரணைகள் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை (06) ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் நடைபெற்றது.

இதன்போது, ஜூன் மாதம் 22ஆம் திகதி கைதான 22 தமிழக கடற்றொழிலாளர்களின் வழக்கு விசாரணையின் போது, 19 கடற்றொழிலாளர்களுக்கும் ஒரு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, அதனை ஐந்து வருட காலத்திற்கு மன்று ஒத்திவைத்துள்ளது.

ஏனைய மூவரும் படகோட்டிகள் அவர்கள். அவர்களுக்கு மன்று 4 மில்லியன் ரூபாய் தண்டம் விதித்துள்ளது.

தண்ட பணம் செலுத்த தவறின் ஒரு வருடக் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என மன்று உத்தரவிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஜூலை 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட 09 கடற்றொழிலாளர்களின் வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து 09 பேரின் விளக்கமறியலையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் மன்று நீடித்துள்ளது.

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கு

# மருத்துவ முகாம்



■ எஸ்.தில்லைநாதன்


பளை மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் புதன்கிழமை (07) விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மருத்துவ முகாம் ஒன்று இடம்பெற்றது.

விசேட தேவையுடைய மாணவர்களின் உடல் நிலையை ஆராய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த முகாமில் வைத்தியர் அருமைத்துரை, நிதி பங்காளர் நலன் விரும்பி அன்பு மற்றும் ஆசிரியர் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.


**தேவை**

பத்தரமுல்ல ‘தியனஉயன’ ஹோட்டலுக்கு சமையல்காரர், காசாளர் மற்றும் உதவியாளர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077-3409108, 070-2545892


# விதைபொதிகள் வழங்கி வைப்பு



■ எம்.எப்.றிபாஸ்

விவசாய அமைச்சினால், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் பயறு மற்றும் உழுந்து பயிர்ச் செய்கைக்கான திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பாசிப்பயறு, உழுந்து போன்ற விதைகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பீ.ரீ.எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் கே.பி.சலீம், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல்.ஏ.மஜீட், விவசாய போதனாசிரியர்கள், பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரிவுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கருகும் மொட்டு, சாம்பலிலிருந்து மீண்டும் பூக்குமா?

ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டு தற்போது அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அரசியல் களத்தில் பல்வேறு தாவல்களையும், தீர்மானங்களையும், கட்டுப்பணம் செலுத்தல்களையும், அறிவிப்புகளையும் நாளாந்தம் அறிந்து கொள்ள முடிகின்றது.

அவ்வாறு கடந்த தேர்தலில் கொடிகட்டிப் பறந்த கட்சியான மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான அறிவித்தல் தொடர்பில் பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளின் பின்னர், நீண்ட காலமாகப் பேசப்பட்டு வந்த பிரபல வர்த்தகரான தம்மிக பெரேராவின் பெயர் மாற்றப்பட்டு, நாமல் ராஜபக்ஷவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

கள நிலைவரம் என்று ஒன்று உள்ளது. மக்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகளுக்கு இந்த மொட்டுக் கட்சியினால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பெருமளவு தாக்கம் செலுத்தியுள்ளன. ஒரு கட்டத்தில் பொறுத்துக் கொள்ள முடியாத மக்கள் வீதியில் இறங்கி, மொட்டுக் கட்சியின் சாதனை வீரராக வர்ணிக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடித்த நிலை ஏற்பட்டது.

இவ்வாறு, ராஜபக்ஷர்களுக்கான செல்வாக்கு தற்போது மக்கள் மத்தியில் பெரிதும் குறைந்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை. மக்கள் மத்தியில் அதிகம் பேசப்படும் வேட்பாளர்களில் மூன்று பிரதான போட்டியாளர்களின் பெயர்களே அதிகம் அடிபடுகின்றன. அதிலும், தற்போதைய ஜனாதிபதிக்கு மொட்டுக் கட்சியின் பெருமளவான உறுப்பினர்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு கட்சியின் நலனைக் கருதாமல், நாட்டின் நலன் கருதி அவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர்கள் கூறும் நிலையில், மொட்டுக் கட்சி மாத்திரம், ராஜபக்ஷர்களை மையப்படுத்தி, கட்சியை மையப்படுத்தி, குடும்பத்தை மையப்படுத்தி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளமை தற்போதைய சூழலில் தமக்குத் தாமே குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது.

குறிப்பாக இந்த மொட்டுக் கட்சியின் வேட்பாளர் அறிவிப்புடன், ராஜபக்ஷர்கள் தனித்து விடப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. கடந்த காலங்களில் ராஜபக்ஷர்களுடன் ஒரு கூட்டம் இருந்தது. இம்முறை அதில் 90 சதவீதமானவை எதிரணியில் அல்லது மாற்று அணியில் தஞ்சம் புகுந்துள்ளன. அத்துடன், கடந்த தேர்தல்களைப் போல் அல்லாமல், இம்முறை தேர்தல் என்பது, மக்கள் தமது வாழ்நாளில் முகங்கொடுத்திராத மோசமான இன்னல்களுக்கு முகங்கொடுத்து, அதன் வடுக்களுடன் வாழ்ந்து வரும் காலப்பகுதியில் நடைபெறவுள்ளது.

இந்த நிலைக்குக் காரணமானவர்களுக்கு பொது மக்கள் மத்தியில் எந்தளவுக்கு வரவேற்பு இருக்கும் என்பது மற்றைய கேள்வி. அத்துடன், மொட்டுக் கட்சியின் அடையாளம் மஹிந்த ராஜபக்ஷ என்பதே. யுத்த வீரன் என்பதைக் கொண்டு, மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்கு இருந்தாலும், அவரின் மகனுக்கு அந்த செல்வாக்கு உள்ளதா, தகப்பனுக்கு இருப்பதால், மகனுக்கு அது செல்லுமா என்பதும் பாரிய கேள்வியாகவே அமைந்துள்ளது.

ஆக மொட்டு தற்போதைக்கு கருகி வருவதையே அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அந்த சாப பலிலிருந்து மீண்டும் மலருமா?


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# அசுரபலம் பெறுவாரா ரணில் விக்ரமசிங்க?

**முருகானந்தம் தவம்**

வாலி இராமாயண கதாபாத்திரம். வானரமான வாலி கிஷ்கிந்தையின் அரசன். வாலி சுக்கிரீவனுக்கு மூத்த சகோதரனும் சிறந்த வீரனும் ஆவான். எதிரில் நிற்கும் எதிரியின் பலத்தில் பாதி தனக்கு சேருமாறு வரம் பெற்றவன் வாலி. அதனால் யாராலும் வெற்றிபெற முடியாத வீரனாக வாலி திகழ்ந்தான். அவ்வாறான ஒரு இலங்கை வாலியாகவே தற்போதைய ஜனாதிபதியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருமான ரணில் விக்ரமசிங்க அவதாரம் எடுத்துள்ளார்.

அரசியலில் தன்னை எதிர்ப்பவர்களின், எதிர்க்கும் கட்சிகளின் அரைவாசிப் பலத்தை தனக்குப் பெற்றுக்கொள்ளும் தந்திரம். அரசியல் சூது,சூழ்ச்சி வரம் பெற்றவர்தான் இலங்கை வாலியான இந்த ரணில் விக்ரமசிங்க. இந்த அரசியல் போரில் ரணில் விக்ரமசிங்கவுடன் மோதி தனது அரைவாசிப் பலத்தையல்ல, 90 வீத பலத்தையும் இழந்து நிற்கின்றது ராஜபக்ஷ சகோதரர்களின் பொதுஜன பெரமுன படையணி.

"அரசியலில் நிரந்தர எதிரியுமில்லை, நிரந்தர நண்பனும் இல்லை" என்பார்கள். இதற்கு மிகவும் பொருத்தமான அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகளைக் கொண்ட நாடாக தற்போது இலங்கையே காணப்படுகின்றது. அந்தளவுக்கு இலங்கையில் தற்போது ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் எதிரிகள் நண்பர்களாவதும் நண்பர்கள் எதிரிகளாவதும் கட்சித் தாவல்களும் ஆதரவு அறிவிப்புக்களும் அரங்கேறத் தொடங்கியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான 'இலங்கை வாலி' ரணில் விக்ரமசிங்கவுக்கும் ராஜபக்ஷ சகோதரர்களின் குடும்பக் கட்சியான மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவிற்கும் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்குமிடையில் நடக்கும் இந்த அரசியல் போரில் ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவின் எதிரிகளின் அரைவாசிப் பலத்தைப் பெறும் வரத்தினால் ஏனைய கட்சிகள் கதிகலங்கிப்போயுள்ளன.

ரணில் விக்ரமசிங்கவின் இந்த எதிரிகளின் அரைவாசிப் பலத்தைப் பெறும் வரத்தினால் ராஜபக்ஷ சகோதரர்களே அதிக எம்.பிக்களை இழந்துள்ளனர் அவர்களின் குடும்ப கட்சியான பொதுஜன பெரமுனவிலுள்ள 120 எம்.பிக்களில் இதுவரை 92 எம்.பிக்கள் ஜனாதிபதி ரணில் ரணில் விக்ரமசிங்கவின் பலத்துடன் இணைந்துள்ளனர். இதில் அக்கட்சி பிரதிநிதியான பிரதமர் தினேஷ் குணவர்தன, அரச தரப்பு பிரதம கொறடாவான பிரசன்ன ரணதுங்க, கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரான ரோஹித அபேகுணவர்தன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் ரணிலுடன் கலந்துள்ளதால் பொதுஜன பெரமுன முக்கிய போர்த் தளபதிகளை இழந்த படையணியாகியுள்ளது.

ரணில் விக்ரமசிங்க ஒரு பக்கத்தால் பொதுஜன பெரமுனவை உடைக்க மறுபக்கத்தால் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி வைத்திருந்த விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான பிவிருது ஹெல உறுமய, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, மற்றும் ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, யுத்துகம அமைப்பு என்பனவும் பொதுஜன பெரமுன படையணியிலிருந்து வெளியேறி புதிய படையணியை உருவாக்கியுள்ளன.

அதுமட்டுமன்றி, கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது ராஜபக்ஷ சகோதரர்களின் பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்த பங்காளிப் படையணிகளான தற்போது அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி, இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகம், அதாவுல்லா எம்.பி. தலைமையிலான தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட இன்னும் சில படையணிகளும் வீரர்களும் இதுவரையில் ரணில் விக்ரமசிங்கவுக்கு பலம் சேர்த்துள்ளனர்.

இது ஒருபுறமிருக்க சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சில எம். பிக்களும் ரணில் விக்ரமசிங்கவுக்கு பலம் சேர்த்துள்ளனர். சேர்க்கவுள்ளனர். அத்துடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உத்தியோகப்பூர்வமாகத் தீர்மானித்துள்ளதாகவும், சுதந்திரக் கட்சியைப் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நிறைவேற்று சபையின் 90 வீதம் பேரின் இணக்கப்பாட்டுடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக முக்கியஸ்தரும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக எதிர்க்கட்சிகளின் பலத்தைப் பெற்று அசுர பலம் பெற்றவராக ரணில் விக்ரமசிங்க விஸ்வரூபம் எடுத்து வரும் நிலையில், ராஜபக்ஷக்கள் படையணி மற்றும் ரணில் படையணி என அரசாங்கத்தின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன படையணி பிளவடைந்துள்ளது. இதனால் பாராளுமன்றத்தில் இருதரப்பினாலும் பெரும்பான்மையை உறுதிப்படுத்த முடியாத நிலைமையும் உருவாகியுள்ளது.

2020இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவின் 'மொட்டு' சின்னத்தில் போட்டியிட்ட கூட்டணியானது 145 ஆசனங்களைக் கைப்பற்றியது.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்ட காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட கூட்டணியினர் உட்பட பல்வேறு தரப்பினர் அரசாங்கத்தை விட்டு வெளியேறியதால் 116 வரையான எம்.பிக்களே அரச தரப்பில் இருந்தனர்.

இதேவேளை, ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவாகிய பின்னர் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில எம்.பிக்களும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதால் அரசாங்க தரப்பு 120 வரையிலான ஆசனங்களை உறுதிப்படுத்தியிருந்தது. இதனால் கடந்த இரண்டு வருட காலங்களில் அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டமூலங்கள் உள்ளிட்ட தீர்மானங்கள் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதுடன் தனி ஒருவனாகப் பாராளுமன்றம் வந்த ரணில் விக்ரமசிங்கவையும் ஜனாதிபதியாக்க முடிந்தது.

இவ்வாறான நிலைமையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தலைத் தொடர்ந்து தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகத் தான் போட்டியிடவுள்ளதாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்திருந்ததுடன், பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய ஜனாதிபதிக்கு எதிரான நிலைப்பாட்டுடன் வேறு வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த முடிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து, பொதுஜன பொரமுனவினர் உள்ளிட்ட அரசாங்கத்தில் அங்கம் வகித்த 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து தமது ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளனர். இதனால் பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துடன் அந்தக் கட்சியைச் சேர்ந்த 25க்கும் குறைவான எம்.பிக்களே இணங்கியுள்ளனர். இதனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பொதுஜன பெரமுன இழக்கும் நிலை உருவாகியுள்ளதுடன், யார் அரசாங்க தரப்பாகச் செயற்படப் போகின்றனர் என்ற சிக்கல்களும் உருவாகியுள்ளன.

பிரதமர் தினேஷ் குணவர்தன இந்த விடயத்தில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் என்பதுடன், ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையால் ஏதாவது தீர்மானம், யோசனை மற்றும் சட்டமூலத்தை கொண்டுவரும் போது அதனை நிறைவேற்றுவதிலும் சிக்கல்கள் உருவாகும் இதனால் பாராளுமன்றத்தை நடத்திச் செல்வதில் பெரும் நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

எனினும், பாராளுமன்றத்தில் ரணில் அரசின் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு பிரதான எதிர்க்கட்சிகள் கோரும் வாய்ப்புக்கள் குறைவு ஏனெனில், அவ்வாறு பெரும்பான்மையை நிரூபிக்க வாக்கெடுப்பைக் கோரினால் இலங்கை வாலியான ரணில் விக்ரமசிங்க தனது பலத்தை நிரூபிக்க தமது பக்கத்திலிருந்து பலத்தை எடுத்து விடுவார் என்ற அச்சம் எதிர்க்கட்சிகளுக்குண்டு.



## வாழ்வியல் தரிசனம்

நல்ல வழியில் முயல்வதினூடாக பெற்றுக்கொள்ளும் பலன்களும் தவறான செயல்கள் மூலம் பெற்றுக்கொண்ட விளைவுகளும் இணைந்தவையே வாழ்க்கை அனுபவங்கள் ஆகும்.

இவற்றை முழுமையாக உணரும் போதும், அதனூடாகப் பெற்றுக்கொண்ட பாடங்களைச் செயற்படுத்தினால், அனுகூலங்கள் மூலம் முழுமையான வெற்றியைப் பெற்றுக்கொள்ளலாம்.

செய்த தவறுகளைத் திரும்பச் செய்தல் ஆகாது. பெற்றுக் கொண்ட நல்ல அனுபவங்களை, இதயத்திலிருந்து அகற்றவும் கூடாது.

சந்தர்ப்பங்களுக்குக் கட்சி மாறுவது போல, நற்குணம், உண்மை போன்றவற்றை வாழ்க்கையில் என்றும் விட்டுக்கொடுத்தல் ஆகாது.

எந்த நிலையிலும் தன்னிலை மாறாது, உண்மையுடன் வாழ்ந்து வந்தால், வாழ்க்கை என்றும் ஆனந்தம், ஆனந்தமே!

உறவுகள் நண்பர்களுக்காக நீதியை விட்டுக்கொடுத்தலாகாது. விட்டுக்கொடுத்தால், மனசாட்சி தீயாகச் சுட்டெரிக்கும்.

அனுபவங்களை உதறுபவர்கள், வாழ்வோடு விளையாடுபவர்கள், உணர்க!.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குப்பைகளினால் அவதி



ஹட்டன்-ஸ்ரீ நிக்ரோதாராம விகாரைக்கு அருகாமையில் அமைந்துள்ள ஹட்டன் டிக்கோயா மாநகர சபையின் வாகன தரிப்பிடத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் உரிய முறையில் எடுத்துச் செல்லப்படாததால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஹட்டன்-ஸ்ரீ நிக் ரோதாராம ஆலயத்தின் உரிமையாளர் ஹட்டன் டிக்கோயா மாநகர சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகள் இந்த இடத்தில் குவிந்து கிடப்பதால் தாம் உட்பட ஆலயத்திற்கு வரும் மக்கள் கடும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஹட்டன், டிக்கோயா மாநகர சபையின் வெசாக் பொசன் போயாவை முன்னிட்டு இந்த இடத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூர் மக்களின் ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழலையும் கடுமையாகச் சேதப்படுத்தும் குப்பைகளை ஹட்டன் நகர சபை உடன் அகற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

– செ.தி.பெருமாள்



# மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் இன்றைய நிலைப்பாடு

இபாஸா இஸ்மாயில்
நான்காம் வருட கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி,
கல்வி–பிள்ளை நலத்துறை
கிழக்கு பல்கலைக்கழகம்

திண்ணைப் பள்ளிகள் இருந்த காலத்திலும் சரி, பாடசாலைகள் உருவான காலத்திலும் சரி, ஆசிரியர் பணி என்பது போற்றுதற்குரிய உயர் பணியாய் உணரப்பட்டு வந்தது. உலகில் காணப்படும் அனைத்து தொழில்களிலும் மேலான தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒரு தொழிலாக ஆசிரியர் தொழில் காணப்படுகின்றது. மற்றைய தொழில் துறையினரைக் காட்டிலும் அதிகமான பொறுப்பும், முக்கியத்துவமும் வாய்ந்தவர்களாக இந்த ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

கணித வாய்ப்பாடு படிக்காமல் வந்தால் ஆசிரியரின் அடியும், இடுப்பில் வாங்கிய கிள்ளும் இன்றும் நினைவில் உள்ளது.

மூன்றாம் வகுப்பிலே இரண்டு முதல் பன்னிரெண்டு வாய்ப்பாடு வரை கடகடவென சொல்லிய நினைவுகள் இன்றும் என் மனக்கண்ணில் நிழலாடுகின்றது. பள்ளிக்குத் தாமதமாகச் சென்றால் பத்து நிமிடம் முட்டிக்கால் போட்ட அனுபவத்தாலோ என்னவோ, இன்றளவும் காலத்தின் அருமையையும், காலம் தவறாமையின் உன்னதமும் உணர முடிகின்றது.

இன்றைய தலைமுறையின் வெற்றிக்கு அன்றைய ஆசிரியர்களின் கண்டிப்பும், பெற்றோர்களின் அரவணைப்புடன் கூடிய கண்காணிப்புமே காரணம் எனில் மிகையல்ல. இன்று நாம் எழுத்தைத் திருத்தமாக எழுதுவதற்கும் பிழையின்றி எழுதுவதற்கும் காரணம் நம் ஆசிரியர்களின் கண்டிப்பும் வழிகாட்டலுமே. ஆதலால் தான் என்னவோ இன்றும் அவர்கள் மீதான மதிப்பும்,மரியாதையும் எள்ளளவும் எம்மிடம் குறையவில்லை.

முன்பொரு காலத்தில் ஆசிரியர்கள் மீது மாணவர்களுக்குப் பக்தி, பயம், மரியாதை முதலியன மேலோங்கி காணப்பட்டன. ஆசிரியர்களை வழிகாட்டிகள் ஆகவும் முன்மாதிரிகளாகவும் மாணவர்கள் எண்ணிய காலம் மாறிப் போய்விட்டது எனலாம்.

உலகிலேயே மிகக் கடினமான மிகச் சவாலான பணியாகவே தற்காலத்தில் ஆசிரியப்பணி காணப்படுகின்றது. தனது கண்ணுக்கு முன்னே நடக்கின்ற விழிப் பரிமாற்றத்தையும் சைகை பேச்சுக்களையும் தட்டிக் கேட்க முடியாத கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் இன்றைய ஆசிரியர்கள்.

வகுப்பில் மாணவர்களின் பெயர் சொல்லி அழைத்த பிறகும் கூட எழும்புவதற்கு யோசித்துக் கொண்டும் கேட்ட கேள்விக்குப் பதில் கூற தயங்குகின்றனர். ஆசிரியர்கள் கண்டிக்கவோ “படி” என்று சொல்லி வற்புறுத்தவோ முடியாத நிலை காணப்படுகின்றது.

ஆசிரியர்கள் தம் சொல்லாலும் செயலாலும் மாணவர்களுக்கு உடல் மற்றும் மனரீதியாக எப்பொழுதிலும் எத்தகைய வழியிலும் துன்பம் தரக்கூடாது என்று இக்கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் இரும்புக்கரம் கொண்டு வலியுறுத்துகின்றது. கண்டிப்பதற்குச் சட்டத்தில் இடம் இல்லாத தன்மை காணப்படுகின்றது.

எங்கே செல்கிறது நம் எதிர்கால மாணவ சமூகம்? மாணவர்கள் வயதுக்கு மீறிய விடயங்களை ஊடகங்கள் மூலம் அறிந்தும் பார்த்தும் ஒழுக்கம் குன்றிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். ஆறாம் விரலாய் தொலைபேசி மோகமும் அதற்கு அடிமையாகி மனநோயாளியாக மாறிய எத்தனையோ மாணவர்கள் எம் மத்தியில் உண்டு.

தாய்மையுள்ளதுடன், மாணவர்களின் வருங்காலம் குறித்த அச்சத்துடன் தான் பெறாத பிள்ளைகளாய் எண்ணி மாணவர்களுக்கு வழிகாட்ட முனையும் ஆசிரியைகளுக்கு மிஞ்சுவது வெறும் மிரட்டல்களே.

ஆசிரியர் வகுப்பறையில் கண்டித்ததால் தனக்கு அவமானம் நிகழ்ந்ததாய் உயிரை விடும் மாணவர்கள். ஆசிரியர்கள் கண்டித்ததால் எங்கள் பிள்ளையை எதற்காக அடித்தீர்கள்? என பொலிஸ் நிலையம் செல்லும் பெற்றோர்கள். பெண் ஆசிரியைகள் கண்டித்தால் அவர்கள் மேல் வன்மம் கொண்டு பாலியல் ரீதியில் தொல்லை கொடுத்து அவர்களின் ஒழுக்கத்திற்கே களங்கம் செய்யும் மாணவச் சமூகம்.

இதற்குக் காரணம் என்ன? இரண்டாம் பெற்றோராய், மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் கடவுளுக்கும் முதற்படியாய் திகழும் ஆசிரியர்களின் கைக்கு விலங்கையும் வாய்க்குப் பூட்டையும் போடும் சட்டமா? பெற்றோர்களின் மாறிய மனப்போக்கா? சமூகத்தின் குறுகிய பார்வையா? எதனையும் பரபரப்பாகி மனிதனை தனக்கு அடிமையாக்க விளையும் ஊடகங்களா? இயல்பாகவே தான் மாணவர்களிடம் குரு பக்தி என்பது மங்கிப்போனதா? இந்த நிலைகளை எங்கே சொல்வது? எப்படிச் சரி செய்வது? தற்போது மாணவர்களிடம் பாடங்களைக் கொண்டு சேர்ப்பதற்கான நேரம் எங்கே? தொலைபேசிக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையாகி விட்டு காது கேளாதவர் போல் நடந்து கொண்டிருக்கும் மாணவர்களை எவ்வாறு அதிக மதிப்பெண்கள் எடுக்க வைப்பது? தன் எதிர்காலம் என்ன என்பது பற்றிய சரியான புரிதல் திட்டமிடல் இல்லாத வாழ்க்கையின் இலக்கினை தீர்மானிக்காத மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்துவது ஆசிரியர்களின் கண்டிப்பின்றி எப்படி சாத்தியம்? இன்று பெரும்பாலான மாணவர்களின் நிலை இதுவே.

பெற்றோரின் அன்பையும் புரியாமல், ஆசிரியரின் கண்டிப்பையும் அறிந்திடாமல் செல்லும் இந்த மாணவ சமூகத்தின் எதிர்காலம் தான் எங்கே? ஆசிரியர்களின் கரங்களைச் சட்டம் இன்று கட்டுமேயானால், ஒழுக்கம் மிகுந்த நல்ல மாணவர்களை உருவாக்குவது எப்படிச் சாத்தியமாகும்?

பெற்றோரும் ஊடகங்களும் சமூகமும் மாணவர்களுக்கு ஆசிரியரை மதிக்கப் போதிக்க வேண்டும். பிள்ளைகளை தம் அருகிலே வைத்துக்கொண்டு ஆசிரியரின் குற்றம் குறைகளை வீட்டிலேயே பேசும் தன்மை சில பெற்றோர்களிடம் காணப்படுகின்றது.

இவ்வாறு நீங்கள் பிள்ளையை அருகில் வைத்துக்கொண்டு ஆசிரியரின் குற்றம் குறைகளைப் பேசினால் உங்கள் பிள்ளை எவ்வாறு ஆசிரியரின் சொல் கேட்டு நடக்கும்? பெற்றோர்கள் இது தொடர்பில் அதிகம் சிந்திக்க வேண்டும். ‘ப்ளேடு’ போன்ற சிறப்பான குரு இல்லாவிட்டால் ‘அரிஸ்டோட்டில்’ என்ற மாமனிதனை உலகம் கண்டிராது.

எல்லா சாதனையாளர்களுக்குப் பின்னாலும் அவர்களின் தாய், தந்தை இருந்தார்களோ தெரியாது. ஆனால் நிச்சயமாக ஒரு ஆசான் இல்லாமல் இல்லை எனலாம். மண்ணை ஆளும் மன்னனை வெளிப்படுத்தவும், விண்ணிலே விமானம் ஓட்டும் விமானியை நெறிப்படுத்தவும் கண்டிப்பாக ஆசிரியர் ஒருவர் இருப்பார்.

ஆகவே, ஆசிரியர்களை மதிக்காமல், தான் தோன்றித்தனமாக செயற்படும் மாணவர்களின் நிலை உடனடியாக மாற வேண்டும். ஆசிரியருக்குச் சாதகமாகவும் அதே நேரம் மாணவர் நலன் பேணுவதாகவும் சட்டங்கள் அமைக்கப்பட வேண்டும்.

சமூகம் அன்று போல் இன்றும் ஆசிரியர்களை மதித்துப் போற்ற வேண்டும். மேலும் திசைமாறிப் பயணித்துக் கொண்டிருக்கும் மாணவ சமூகத்தை மீளவும் நல்வழிக்குக் கொண்டுவரப் பெற்றோர், சமூகம், அரசாங்கம், ஊடகம் ஆசிரியர்களுடன் கைகோர்க்க வேண்டும். ஆசிரிய சமூகத்தைத் தவறாகச் சித்தரித்து இழிவுபடுத்தும் சமூகத்தின் மனநிலை நிச்சயம் மாற வேண்டும். இல்லையெனில், இச்சமூகம் அழிவை நோக்கிச் செல்வதை எவராலும் தடுக்க முடியாது.

# பெண்ணை மதித்திடு

முகைமினா மூசா
கிண்ணியா

சுமதி தனது பணிகளை முடித்துக் கொண்டு வெளிநாட்டில் உள்ள தனது கணவர் மதனுக்கு புலத்தில் வணக்கம் போட்டுக் கொண்டு. மகளை, “சீக்கிரம் வாங்க மகள், ஆட்டோ வந்து விடும்” என கூவினாள். மகள் சாந்தி, “ஆ இதோ வாரேன்மா வந்துட்டேன்” என கூறிக் கொண்டு தனது அறைக்குப் சென்று பாடசாலைக்கான சீருடைக்கு மாறிக் கொண்டு கதவருகில் காத்திருந்த தாயை நெருங்கிக் “குடும்மா என செல்லமாக தனது உணவுப் பொட்டலத்தையும் பாடசாலைப் பையையும் வாங்கிக் கொண்டாள்.

சுமதியும் மகளும் கேட்டில் வந்து “சரார்….. என நிறுத்தப்பட்ட முச்சக்கர வண்டியில் ஏறிக் கொண்டனர். வண்டி வேகமாகப் பறந்து பாடசாலையில் நிறுத்தப்பட்டதும், மகள் இறங்கிப் பட்டாம்பூச்சியாகப் பறந்ததும் தனது அலுவலகத்தை அடைந்தாள்.

அலுவலகத்தில் சுமதியை அனைவருக்கும் ரொம்பவும் பிடிக்கும். அவள் நேர்த்தியாக ஆடை அணிவாள், நேரத்துக்கு சுறுசுறுப்பாக இயங்குவாள்.

அவள் வந்தாலே சக ஊழியர்கள் எல்லோருக்கும் சுறுசுறுப்பும் தொற்றிக்கொள்ளும். “பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்” எனும் பழமொழிக்கேற்ப சுமதி தன்னோடு கூட இருப்பவர்களைத் தன்னைப்போலவே கலகலப்பாக வைத்திருக்கும் வலு கெட்டிக்காரி.

ஆனால், அவளுக்கு அமைந்த வாழ்க்கை மட்டும் கையெழுத்து நன்றாக இருந்தால் தலையெழுத்து நன்றாக இராது என்பர்.

அது போலவே அவளது வாழ்க்கைத்துணையால் அவளுக்கு மனமகிழ்ச்சியை வழங்க முடியவில்லை. எல்லாம் விதியென அடிக்கடிக் தன் விதியை நொந்து கொள்வாள்.

சுமதிக்கு மூன்று பெண் பிள்ளைகள் சுமதியின் கணவர் தனக்கு சரியான வருமானம் போதாமையால் வெளிநாட்டுக்குச் தொழில் தேடிச் சென்று விட்டார். பெயருக்குத் தான் சுமதியின் கணவர் வெளிநாட்டில் உழைப்பவர்.

கணவரோடும் கோபமில்லை அவளுக்கு தன் மாமியார் ஒரு பெண்ணாக இருந்தும் தனக்கும் பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகள் என்பதைக்கூட காரணம் காட்டடித் துன்புறுத்துவது மட்டுமே அவளுக்கு வருத்தமாக இருக்கிறது.

அவள் தனது சூழ்நிலைகளைக் கடவுளிடம் பொறுப்புச் சாட்டி விட்டு தனது பிள்ளைகளோடு மிகவும் அன்பாகவும், அக்கறை யோடும் நடந்து வந்தாள். அவளது பிள்ளைகளும் அவளது ஆசைகளை நிறைவேற்றும் வீராங்கனைகள் ஆகக் காணப்பட்டார்கள்.

“தாயைப் போல பிள்ளை நூலைப் போலச் சேலை” என்ற பழமொழிக்கேற்ப இருவர் மருத்துவத்துறையில் தெரிவாகிக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தமது தொடர்ந்து இளம் வைத்தியர்களாக சுமதியின் எண்ணச் சிறையில் குடியிருந்து வருகின்றனர். தன்னையும் பிள்ளைகளையும் பெண்கள் என கேவலமாக நினைத்த தனது கணவரின் குடும்பத்தினரை.

மூக்கில் விரல் வைத்து தன் பிள்ளைகளின் தயவில் வாழ வைக்க கல்வியே சிறந்த கருவி என்பதை உணர்ந்து கடிகாரத்துடன் இணைந்து ஓடிக் கொண்டிருக்கிறாள்.

மகள்கள் இருவரும் தமது படிப்பினைகள் சிறப்பாக மேற்கொண்டு வருவதோடு, தமது தாயாருக்கு மிகவும் ஒத்தாசையாக ஆறுதலாக இருந்து வந்தனர். தோற்றத்தில் சுமதியின் பிள்ளைகள் தந்தையைப் போல இருந்தாலும் குணம், பண்பு, சுறுசுறுப்பு எல்லாமே சுமதி போலத்தான்.

சுமதிக்குப் பிள்ளைகள் கல்வி வாழ்வில் வெற்றி கிடைத்ததால் மனதில் எந்தக் கவலைகளுமின்றி உற்சாகமாகவே காணப்பட்டாள்.

சுமதி இலக்கியத் துறையிலும் ஆர்வமுடையவள் நன்றாகப் பாடுவாள், நடிப்பார், கவிதைகள் சிறுகதைகள், கட்டுரைகள் என அனைத்துத் துறைகளிலும் கொடிகட்டிப் பறந்தாள்.

அவளுக்குத் தனது கவிதைகளைப் புத்தகமாக வெளியிட வேண்டும் என்ற ஆசை வேறு, ஆனாலும், அவளிடம் இலட்சக் கணக்கில் பணம் செலவு செய்து புத்தகம் வெளியிடக்கூடிய நிலையில் சுமதி இல்லை.

இதை அறிந்த சுமதியின் அலுவலக நண்பர் ஒருவர் முன்வந்து பாதி செலவை உதவியாக அளித்து புத்தக ஊக்குவிப்பை வழங்கிவரும் அன்பின் அறக்கட்டளை அமைப்புடன் சுமதியை இணைத்து விட்டார்.

இப்போது சுமதிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. தன்னையும் பொது வெளியிலாவது பெண்ணென ஒதுக்காமல் மதிக்கக்கூடிய நாளுபேர் இருக்கிறார்கள் என்று பூரிப்படைந்தாள்.

அவள் தனது கவிதைகளைப் பொறுக்கித் தொகுப்பதில் தனது ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அறுபத்தைந்து கவிதைகளைக் கூக்குள் கோப்பில் இலகுவாகச் சேகரித்து அன்பின் அறக்கட்டளை மேலாளருக்கு அனுப்பி வைத்தாள் அவளுக்கு சில பல அனுபவங்களை வழங்குவதற்காக அன்பின் அறக்கட்டளை மேலாளர் அவர்கள் திட்டமிட்டு அவளைப் பல புத்தக வெளியீடு நிகழ்வுகளுக்கு அழைக்கத் தொடங்கினார.

அவளும் மகிழ்ச்சியாக அவரது அழைப்பை ஏற்றுக் திருமலை நகராட்சி மன்ற நூலகக் கேட்போர் கூடத்துக்கு அடிக்கடி வருகை தந்து புதிய பல நண்பர்களைக் பெற்றுக்கொண்டு தன் கலைப் பயணத்தையும் மனம் நிறைந்து பூரணமான மனநிலையில் முன்வைத்த காலைப் பின் வைக்காது முன்னேறத் தொடங்கினாள்.

சுமதிக்கு அடுத்த ஒரு புதிய பிரச்சினை ஏற்படப் போவது தெரியாமல் தனது கணவரின் வீட்டுப் பக்கம் சென்று அதிக நாட்களாகி விட்டன அங்கு சென்று வரலாம் என பழங்களும் பலகாரங்களும் வாங்கிக் கொண்டு மாமியாரின் வீட்டுக்குச் சென்றாள். அங்கு தனது கணவரின் மூத்த சகோதரி சுமதியை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

இன்றைக்கு எப்படியும் முகத்துக்கு நேரே கேட்டு விட வேண்டுமெனக் காத்திருந்தாள். அவள் நினைத்ததை சுமதியிடம் கேட்டாள் “மூத்த மருமகளை எனது இரண்டாவது மகனுக்கு பேசி முடிக்கலாம் தம்பியிடம் வெளிநாட்டுக்குப் பேசி விட்டேன். அவனுக்கு முழு சம்மதம். நீங்களும் மகளும் நல்ல முடிவைக் கூற வேண்டும்” என்றாள். இவற்றை கேட்டது தான் தாமதம் சுமதி வெளிறி வெளு வெளுத்துப் போய் விட்டாள். அவள் இடி விழுந்த நாகம் போல அதிர்ந்து போய்க் கதிரையில் அமர்ந்து தலையைக் கைகளால் பொத்திக் கொண்டு குனிந்து அழத் தொடங்கி விட்டாள்.

தனக்கு இந்த விடயத்தில் துளியும் இஸ்டமில்லை என்பதைத் தெளிவாகக் கூறி விட்டு அவள் வெடுக்கென எழுந்து வீட்டுக்கு வந்து தனது மகளிடம் தொலைபேசியில் அழுதாள். மகளும் தாயை அழ வேண்டாம். தனக்கும் இந்த விடயத்தில் விருப்பமில்லை என்றும் தான் தந்தையிடம் பேசுவதாகவும். சொன்னபோதே அவளுக்கு நிம்பதியாக இருந்தது.

காலங்கள் ஓடிச் சென்று சுமதியின் மாமியார் வாதம் ஏற்பட்டு சுமதியின் இரண்டாவது மகள் வேலை பார்க்கும் தம்பலகாமம் வைத்தியசாலையில் நின்று கொண்டு சுமதியின் பிள்ளைகளைப் பெண்கள் என முகத்தைத் திருப்பிக் கொண்டுதன்னைக் கடவுளாகக் கருதி சுமதியின் வாழ்வில் ஆடிய ஆட்டங்கள் தன்னைக் கடவுள் அவர்களின் காலடியில் கட்டிப் போட்டுள்ளதை உணர்ந்தவளாய் கூனிக் குறுகி கடவுளிடம் அமைதியாக மன்னிப்புக் கேட்கத் தொடங்கினாள்.

தன் மகனை நாட்டுக்கு அழைத்து தனது குற்றங்களுக்கும் பிராயச் சித்தமாக தான் சேர்த்து வைத்துள்ள நகை நோட்டுக்களையும் தனது பெயரில் உள்ள வீட்டுப் பாத்திரங்களையும் திருப்பிக் கொடுக்க முடிவெடுத்தவளாக தனது மூத்த மகளிடம் எல்லா விடயங்களையும் கூறி விட்டு இரவுஉறங்கப்போனாள். காலையில் பேத்தி வாப்பும்மா எனத் தனது அப்பம் மாவை அழைத்தாள்.ஆனால், அப்பப்பா இறந்து அதிக நேரமானதை உணர முடிந்தது.



டாக்கா

பங்களாதேஷின் இடைக்கால அரசின்

# தலைவராகிறார் முகம்மது யூனுஸ்

பங்களாதேஷில் இடைக்கால அரசுக்கு, நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகம்மது யூனுஸ் தலைமை ஏற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிரடியான அரசியல் மாற்றங்களால் பங்களாதேஷ் முழுவதுமே இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்த நிலையில், இராணுவத்தின் கண்காணிப்பில் இடைக்கால அரசு அமைக்கப்படும் என்றும் விரைவில் பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், பங்களாதேஷில் அமையவிருக்கும் இடைக்கால அரசுக்கு முகம்மது யூனுஸ் தலைமை ஏற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிட்டகாங் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான முகம்மது யூனுஸ்



வறுமையில் வாடுபவர்களிடம் ஈடாக எதையும் கோராமல் சிறு தொகைகளை கடனான வழங்கும் கிராமின் வங்கி என்ற பொருளாதார சித்தாந்தத்திற்காக நோபல் பரிசு பெற்றார்.

தற்போது வெளிநாட்டில் வசிக்கும் அவர், நாடு திரும்பியதும், இடைக்கால அரசு இவ்வார இறுதிக்குள் பதவியேற்கும் என கூறப்படுகிறது.

அதேசமயம், முகம்மது யூனுசுக்கு ஆதரவாக மேலும் சிலர் இடைக்கால அரசில் இராணுவத்தால் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன்

ட்ரம்ப்பை கொலை செய்ய சதி:

## பாக். பிரஜை கைது



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியும், குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான டொனால்ட் ட்ரம்ப்பை கொல்ல சதி செய்ததாக பாகிஸ்தானை சேர்ந்தவரை எப்பிஐ அதிகாரிகள் கைது செய்தனர்.

ட்ரம்ப், ஜனாதிபதியாக இருந்த போது 2020ஆம் ஆண்டு ஈரானின் முக்கிய தலைவரான மேஜர் ஜெனரல் குவாசிம் சுலைமானியை கொல்ல உத்தரவிட்டார். இதற்கு பதிலடியாக அமெரிக்காவைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களை கொலை செய்ய ஈரான் திட்டமிட்டு வருவதாக கூறப்பட்டது.

இந்நிலையில், ட்ரம்ப்பை கொல்ல சதி செய்ததாக பாகிஸ்தானைச் சேர்ந்த ஆசிப் மெர்ச்சண்ட் என்பவரை அமெரிக்காவின் எப்பிஐ அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இதுபற்றி அமெரிக்க அட்டர்னி ஜெனரல் கூறுகையில், "சுலைமானி கொலைக்கு பழிவாங்கும் வகையில், அமெரிக்காவைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களை கொல்ல சதி செய்யும் ஈரானின் முயற்சியை முறியடிக்க தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்" என தெரிவித்தார்.

வொஷிங்டன்

அமெரிக்க துணை ஜனாதிபதி

## வேட்பாளரானார் டிம் வோல்ஸ்




அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ஆளும் ஜனநாயக கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக 60 வயதான டிம் வோல்ஸ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில், நவம்பர் 5இல் ஜனாதிபதி தேர்தல் நடக்கிறது. குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் மீண்டும் களம் காண்கிறார். அந்த கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக ஒஹியோ மாகாணத்தின் செனட்டராக உள்ள வேன்ஸ் சமீபத்தில் அறிவிக்கப்பட்டார்.

இந்நிலையில், ட்ரம்பை எதிர்த்து ஆளும் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக, தற்போது துணை ஜனாதிபதியாக உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் போட்டியிட உள்ளார்.

இதற்கிடையே, ஜனநாயக கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக மின்னசோட்டா மாகாண கவர்னர் டிம் வோல்ஸ் கடந்த 6ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக தெரிவு செய்யப்பட்டார். இதை கமலா ஹாரிஸ், தன் சமூக வலைத்தளத்தின் வாயிலாக அறிவித்தார்.

இராணுவ அதிகாரியாக பணியாற்றிய டிம் வோல்ஸ், 2018ஆம் ஆண்டு முதல் மின்னசோட்டா மாகாணத்தின் கவர்னராக உள்ளார். ஆசிரியராக தன் பணியை ஆரம்பித்த அவர், கால்பந்து பயிற்சியாளராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெங்களூர்

'குடி'மகன்களுக்காக கர்நாடகாவில்

## புதிய அனுமதி?




பெங்களூரில் நள்ளிரவு ஒரு மணி வரை கிளப்புகள், பார்கள் திறந்திருக்க கர்நாடக அரசு அனுமதி அளித்துள்ளது.


ஹைடெக் நகரமான பெங்களூரில் பல மாநில மக்கள் வசித்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக அங்குள்ள பன்னாட்டு நிறுவனங்களில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பணியாற்றி வருகின்றனர். அதனால் எந்நேரமும் சாலைகளில் மக்கள் மற்றும் வாகன நடமாட்டத்தை காணலாம்.

இந்நிலையில், மாநில அரசின் வருவாயை மேலும் அதிகரிக்க, பெங்களூரில் உரிமம் பெற்ற பார்கள், கிளப்புகள், உணவகங்கள் உள்ளிட்டவை காலை 9 மணி முதல் நள்ளிரவு ஒரு மணி வரை இயங்க கர்நாடகா அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான உத்தரவும் அதிகாரப்பூர்வமாக பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மும்பை

வயநாடு மண்சரிவுக்கு

## நடிகர் பிரபாஸ் ரூ.2 கோடி நிதி



கேரள முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.2 கோடி நன்கொடையாக நடிகர் பிரபாஸ் வழங்கினார்.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் சூரல்மலை, முண்டக்கை, புஞ்சிரிமட்டம், அட்டமலை ஆகிய பகுதிகளில் பயங்கர மண்சரிவு ஏற்பட்டு இன்றுடன் 10 நாட்களான நிலையில், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வெயில், மழை ஆகியவற்றையும் பொருட்படுத்தாமல் பெரும் சிரமங்களுக்கு இடையே இந்தப் பகுதிகளில் தினமும் உடல்களைத் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு நாளும் பல்வேறு பகுதிகளில் இருந்து சடலங்களும், உடல் பாகங்களும் கிடைத்து வருகின்றன. இதுவரை கிடைத்த சடலங்களின் எண்ணிக்கை 410ஐ தாண்டி விட்டது. இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், ஏராளமானோர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மண்சரிவில் சிக்கிய இன்னும் 200க்கும் மேற்பட்டோரை காணவில்லை. அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனிடையே கேரள முதல்வர் நிவாரண நிதிக்கு நடிகர், நடிகைகள் பலர் நிதி வழங்கி வருகிறார்கள்.

அந்த வகையில், வயநாடு மண்சரிவு பாதிப்பு மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளுக்காக ரூ.2 கோடி கேரள முதல்வரின் பேரிடர் நிவாரண நிதிக்கு நடிகர் பிரபாஸ் வழங்கி உள்ளார்.



துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில்

# மூன்றாமிடத்துக்கு முன்னேறிய றோஹித்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு இந்திய அணித் தலைவர் றோஹித் ஷர்மா முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கெதிரான முதலிரண்டு போட்டிகளில் 122 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தை ஷர்மா அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,


1.பாபர் அஸாம், 2.ஷுப்மன் கில், 3.றோஹித் ஷர்மா, 4.விராட் கோலி, 5.ஹரி டெக்டர், 6.டரைல் மிற்செல், 7.டேவிட் வோர்னர், 8.டேவிட் மலன், 9.பதும் நிஸங்க, 10.றஸி வான் டர் டுஸன்.

முதல் 10 பந்து வீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.கேஷவ் மஹராஜ், 2.ஜொஷ் ஹேசில்வூட், 3.அடம் ஸாம்பா, 4.குல்தீப் யாதவ், மொஹமட் சிராஜ், 6.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ், 7.மொஹமட் நபி, 8.ஜஸ்பிரிட் பும்ரா, 9.ஷகீன் ஷா அஃப்ரிடி, 10.ட்ரெண்ட் போல்ட்.

முதல் ஐந்து சகலதுறை வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.மொஹமட் நபி, 2.ஷகில் அல் ஹஸன், 3.சிகண்டர் ராசா, 4.அசாட் வலா, 5. ரஷீட் கான்.



பரிஸ் 2024: இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதை

## தவறவிட்ட அருண தர்ஷன

பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக்கின் ஆண்களுக்கான 400 மீற்றர் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதை இலங்கையின் அருண தர்ஷன தவற விட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் சுவடு மாறியதாகக் கூறப்பட்டு தர்ஷன தகுதி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை, புதன்கிழமை(07) நடைபெற்ற பெண்களுக்கான குழு ஏ தகுதிகாண் போட்டியைத் தொடர்ந்து இலங்கையின் டில்ஹானி லெகம்கேயும் வெளியேறினார். லெகம்கே 53.66 மீற்றரே அதிகபட்சமாக எறிந்த நிலையிலேயே, இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான 63 மீற்றரை அவர் கடக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. தனது முதற் தடவையில் 53.66 மீற்றரை லெகம்கே எறிந்ததுடன், இரண்டாவது தடவை அவரின் எறி பதிவாகவில்லை என்பதோடு மூன்றாம் முறை 53.24 மீற்றர் தூரம் எறிந்திருந்தார்.

பதக்கப் பட்டியலில் 24 தங்கம், 31 வெள்ளி, 31 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் ஐக்கிய அமெரிக்கா காணப்படுகின்றது. 22 தங்கம், 21 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் சீனாவும், 14 தங்கம், 12 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் அவுஸ்திரேலியாவும், 13 தங்கம், 16 வெள்ளி, 19 வெண்கலப் பதக்கங்களுடன் நான்காமிடத்தில் பிரான்ஸும் காணப்படுகின்றன. 12 தங்கம், 15 வெள்ளி, 19 வெண்கலப் பதக்கங்களுடன் ஐந்தாமிடத்தில் பெரிய பிரித்தானியா காணப்படுகின்றது.

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்து:

## கிராமப்புற பாடசாலைகள் பிரகாசிப்பு

அஸ்ஹர் இப்றாஹீம்







வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில், 17 வயதுக்குட்பட்ட ஆண்களில் முல்லைத்தீவு கோட்டை கட்டிய குளம் மகா வித்தியாலயம் சம்பியனானதுடன், மன்னார் அடம்பன் மகா வித்தியா லயம் இரண்டாமிடத்தைப் பெற்றது.

இதேவேளை, 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களில் வவுனியா காங்கராயன்குளம் மகா வித்தியாலயம் சம்பியனானதுடன், மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பெற்றது.

இந்நிலையில், 17 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் வவுனியா காங்கராயன்குளம் மகா வித்தியாலயம் சம்பியனானதுடன், யாழ். ராமநாதன் கல்லூரி இரண்டாமிடத்தைப் பெற்றது.

இதேவேளை, 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம் சம்பியனானதுடன், வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பெற்று மேற்கூறப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 08, ஆகஸ்ட் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.